

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அத்திகடவு – அவிநாசி திட்ட பணிகள் குறித்து தொடர்புடைய அலுவலர்களுக்கான கூட்டம் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா உள்ளிட்ட துறை சார்ந்த அரசு அதிகாரிகள் பலர் உள்ளனர்.

### உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில்

# பழங்குடியினர்க்கென - 50 படுக்கைகள் கொண்ட தனிப்பிரிவு!

## மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

**நீலகிரி, ஆக.12-**

**நீலகிரி மாவட்டத்தில், ரூ.461.18 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனை கட்டுமான பணிகளையும், மருத்துவ மனையில் ஏற்படுத்தப் பட்டுள்ள அறுவை சிகிச்சை அரங்கங்கள், பரிசோதனை நிலையங்கள், நிர்வாக கட்டிடம், புறு நோயாளிகள் பிரிவு, உள் நோயாளிகள் பிரிவு உள்ளிட்ட பிரிவுகளையும், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுதுறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (10.08.2024) நேரில் பார்வை யிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.**

இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்வில், மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் செய்தி யாளர்களிடம் தெரிவித்த தாவது:-

முதலமைச்சர் அவர்க ளின் அறிவுறுத்தலின்படி யும், வழிகாட்டுதலின்படி யும், நீலகிரி மாவட்டத்தில் கட்டப்பட்டு வரும் அரசு மருத்துவக்கல்லூரி மருத்து வமனை கட்டுமான பணி களை சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களுடன் இணைந்து இன்று நேரில் ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

உதகையில் கட்டப் பட்டு வரும் அரசு மருத்து வக்கல்லூரி மருத்துவம னையானது விரைவாக வும், தரமாகவும் கட்டப் பட்டு, விரைவில் பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர அனைத்து நடவடிக்கைகளும் எடுக் கப்பட்டு வருகிறது. சுற்று லாத்துறை அமைச்சர் அவர் களுடன் இணைந்து நானும், நீலகிரி மாவட் டத்தில் கடந்த 3 ஆண்டுக ளாக பல்வேறு துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங் கள், அதற்கு தேவையான கட்டடங்கள், செவிலியர் குடியிருப்பு, மருத்துவம னைகளில் புற நோயாளிக ளுக்கான கட்டடங்கள் உள் ளிட்ட பல்வேறு மருத்துவ உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்களின் பயன் பாட்டிற்கு திறந்து வைத் துள்ளோம்.

மேலும், 12.01.2022 அன்று பிரதமர் அவர்க ளால், தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களின் முன் னிலையில் உதகை அரசு மருத்துவக்கல்லூரி திறந்து வைக்கப்பட்டு, மிகச் சிறப் பாக நடைபெற்று கொண் டிருக்கிறது. இந்த அரசு மருத்துவக்கல்லூரி மருத்து வனைக்கு 700 படுக்கை கள் கொண்ட கட்டுமான பணிகள் வேகமாக நடை பெற்று வருகிறது. பல் வேறு வளர்ச்சித்திட்டப் பணிகள் நீலகிரி மாவட் டத்தில் நடைபெற்று கொண்டிருந்தாலும், பொதுமக்கள் பலருக்கும் பயன்படக்கூடிய இந்த மருத்துவமனை கட்டு மான பணிகள் விரைவாக வும், தரமாகவும் இருக்க வேண்டும் என்ற நோக் கில் சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுடன் இணைந்து பலமுறை நேரில் ஆய்வு மேற் கொண்டு வருகிறோம்.

மேலும், இயற்கை இடையூறு, மலைப்பகுதி மற்றும் வனப்பகுதி என்ப தால் பல அனுமதிகளும், பல இடர்பாடுகளுக்கு மத் தியில் கட்டுமான பணிகள் வேகமாக நடைபெற்று, தற்போது முடிவடையும் தருவாயில் உள்ளது. இந்தி யாவிலேயே மலை நகரத் தில் 700 படுக்கைகள் கொண்ட அதிநவீன வசதி கொண்ட மிகப்பெரிய மருத்துவமனை என்ற வகையில் இம்மருத்துவ மனை உருவாகி வருகிறது. மருத்துவமனைக்கு தேவை யான குடிநீரை பொறுத்த வரை பொதுப்பணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

இம்மருத்துவமனை யில் அதிநவீன் தொழில் நுட்பத்துடன் கூடிய எம். ஆர்.ஐ ஸ்கேன், சிடி ஸ்கேன், டிஜிட்டல் எக்ஸ்ரே, புறநோயாளி களுக்கான கட்டடம், உள்நோயாளிகளுக்கான கட்டடம், மத்திய பரிசோ தனை நிலையம், ஸ்டெ யின்லெஸ் ஸ்டீல் சுவர்கள் கொண்ட 12 அதிநவீன அறுவை சிகிச்சை அரங் கங்கள், தீவிர சிகிச்சை பிரிவு மற்றும் இருதய சிகிச்சை பிரிவு கட்டிடம், நிர்வாக கட்டிடம், சல வையகம், சமையல் கூடம் என அனைத்து வசதிகளும் நிறைந்த மருத்துவமனை யாக இம்மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது. நேற்றைய தினம் பழங்கு டியினர்களை கௌரவிக் கும் வகையில் நடை பெற்ற பூர்வீக குடிமக்க ளின் சர்வதேச தின விழா கொண்டாடப்பட்டது.

நீலகிரி மாவட்டத்தில், வசித்து வரும் பழங்குடியி னர்களின் கோரிக்கை களை நிறைவேற்றும் வித



மாக தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் கடந்த சட்டப்பேரவை 110 விதி யின் கீழ், 16வது அறிவிப் பாக 700 படுக்கைகள் கொண்ட உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்து வமனையில் பழங்குடியி னர்களுக்கென 50 படுக் கைகள் கொண்ட தனி பிரிவு ஒன்று அமைக்கப்ப டும் என அறிவித்ததை தொடர்ந்து, அப்பணிக ளும் வேகமாக நடை பெற்று வருகிறது.

இதில், 20 படுக்கைகள் பழங்குடியின மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல னுக்கான பிரிவாகவும், மீதமுள்ள 30 படுக்கை கள் பொது பிரிவாகவும் அமைக்கப்பெறும். அதன் உட்கட்டமைப்பு பணி கள் இன்று நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், கோத்தகிரி அரசு மாவட்ட தலைமை மருத் துவமனையில் ரூ.3.03 கோடி செலவில் அவசர சிகிச்சை பிரிவு கட்டிடம், ரூ.1.25 கோடி செலவில் தெப்பக்காடு மற்றும் இத் தலார் அரசு ஆரம்ப சுகாதா நிலையங்களில் கூடுதல் கட்டடம் மற்றும் மருத்துவ அலுவலர் குடியி ருப்பு கட்டடம், ரூ.14.80 கோடி செலவில் எம ரால்டு அரசு மருத்துவம னையில் அவசர சிகிச்சை அரங்க கட்டடம் மற்றும் 50 படுக்கைகள் கொண்ட பிரிவு உள்ளிட்ட பல் வேறு மருத்துவ கட்டடங் கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், ரூ.164.91 கோடி செலவில் கட்டப் பட்ட உதகை ஆர். கே.புரம் நகர்புற நல வாழ்வு மைய கட்டட மும், மசக்கல் துறை சுகா தார நிலைய கட்டடம் உள்ளிட்ட கட்டங்களும் பொதுமக்களின் பயன் பாட்டிற்காக கொண்டு வரப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் 37 அரசு ஆரம்ப சுகாதார நிலையங் கள் உள்ளது. இன்று தூனேரி அரசு ஆரம்ப சுகா தார நிலையத்தில் நோயா ளிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சைகள் மற்றும் பரிசோதனைகள் குறித்து, நேரில் ஆய்வு மேற்கொள் ளப்பட்டது.

இம்மருத்துவமனைக்கு 2 மருத்துவர்கள் நிய மிக் கப்பட்டிருந்த நிலையில் 2 மருத்துவர்கள் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். மேலும் 2023 ஜுன் 6ம் நாள் அன்று கோயமுத்தூர் மாவட்டத்தில் முதல மைச் சர் அவர்களின் ஆணைக்கி ணங்க, இருதய நோயால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு உடனடி யாக 3 வகையான 14 மருந் துகள் அடங்கிய லோடிங் டோஸ் என்ற மருந்து வழங்கும் திட்டம் துவக்கி வைக்கப்பட்டது.

நீலகிரி மாவட்டம் தூனேரி ஆரம்ப சுகாதார நிலையத்தில் இன்று ஆய்வு மேற்கொண்ட போது, கடந்த ஒரு ஆண்டு காலத்தில் ஒரு நபர் இத் திட்டத்தின் கீழ் பயன் பெற்றுள்ளார். கடந்த 30.07.2024 அன்று கேரள மாநிலம், வயநாட்டில் ஏற் பட்ட மிகப் பெரிய நிலச்ச ரிவில் பாதிக்கப்பட்டவர் களுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு முத லமைச்சர் அவர்கள் உட னடியாக ரூ.5 கோடி நிவா ரணத் தொகையாக வழங்கியதோடு, 10 நபர் கள் கொண்ட மருத்துவக் குழுவினரை அனுப்பி வைத்தார்கள்.

நீலகிரி மாவட்டம் கூட லூர் பகுதியைச் சேர்ந்த திருமதி. அ.சபீனா என்ப வர் தன்னம்பிக்கையுடன் தானாக முன்வந்து ஆற்றை கடந்து பாதிக்கப் பட்ட 30க்கும் மேற்பட்ட மக்களுக்கு முதலுதவி சிகிச்சை அளித்தது பொது மக்களால் பாராட்டப்பட் டது. இவரின் சேவை பாராட்டும் வகையில் இன்றைய தினம் நினைவு பரிசு மற்றும் பொன் னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. அதேபோல் நிலச்சரிவு ஏற் பட்ட பகுதிக்கு நேரடி யாக சென்று மீட்பு மற் றும் மருத்துவ உதவிகள் செய்த 8 நபர்களும் கௌரவிக்கப்பட்டது.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக, அமைச்சர் கள், வயநாட்டில் ஏற் பட்ட நிலச்சரிவில் பாதிக் கப்பட்டவர்களுக்கு துணிச்சலாக ஆற்றைக்க டந்து மருத்துவ சேவை வழங்கிய திருமதி.சபீனா அவர்களின் குறும்படத்தி னைப் பார்வையிட்டார்.

# காலம் வெல்லும் கலைஞரின் அறிவாயுதம் முரசொலி!



இதயத்தில் தொட்டில்கட்டி
இனிய**முர சொலி**மழலை
உதயசூரி யன்ஒளிபோல்
உள்ளொளியைத் தமிழர்பெற
எதிர்நீச்சல் போராடி
எம்கலைஞர் வெற்றிகண்டே
முதன்மைபெறத் **தி.மு.க.**
**மூச்சான முரசொலியே!**

பகுத்தறிவுப் பகலவனின்
பாதைவழி அறிஞரண்ணா
வகுத்தநிலை வளர்கலைஞர்
வாய்மைஅறம் நீதிநெறி
தொகுத்துதமிழ் நாடுவாழ
தொடர்பயணம் குறிப்பேடாய்
தகுகொள்கை முரசொலிக்கத்
தந்தஏடு முரசொலியே!

சாதிமத பேதமிலாத்
சமத்துவத்தின் திறவுகோலே!
போதிமரத் துப்புத்தன்
போதனையின் மறுபதிப்பே!
மேதினியில் சாதனைக்கோர்
மின்னலொளி நிலைத்ததுபோல்
ஆதிமுதல் தமிழ்மொழிக்கே
அடித்தளம்காண் முரசொலியே!

**எண்பத்து மூன்றாண்டில்**
எடுத்துவைக்கும் அடிபுதுமைக்
கண்கொள்ளாக் காட்சியம்மா
கடும்உழைப்புக் கலைஞரெம்மான்
பணிஉயிர்ப்பாய் **முரசொலியை**
**பண்பு'மாறன்' செல்வமுடன்**
கணித்தின்றோ **உதயநிதி**
காக்குமுர சொலிமுழக்கம்!

கலைஞர்தாம் கழகத்தைக்
கடுந்தவத்தால் காத்துஇன்றோ
கலைஞர்வழித் தோன்றல்கள்
காலமென்றும் நிலைபெறவே
கலைஞர்புகழ் **முரசொலியைக்**
காக்கின்ற **மு.க.இஸ்டாலின்**
கலைஞராட்சி வெல்முதன்மை
**காண்முதல்வர் முரசொலியே!**

எழுத்தாளர் பரம்பரைகள்
எழுச்சிசிந்த னையாளர்
பழுத்தகவி வாணர்கள்
புடம்போட்ட கருத்துரைப்பார்!
தொழுதகைமை முரசொலித்தாய்
தமிழ்பாலூட் டியேவளர்த்தே
விழுதுவிடும் வெற்றிவாகை
விழுமியம்காண் முரசொலியே!

அறிவாயு தத்துமுரசே!
அணையாவிளக்கு முரசொலியே!
குறிக்கோளின் மெய்விளக்கே
கொள்கைத் தி.மு.க.வின்
நெறிவிளக்கே! நிலைவிளக்கே!
நெடும்பகைமை தலைகுனிய
வெறிபிடித்தார் மிரண்டோட
விடியல்தந்த முரசொலியே!
**வாழி! நீடூழி!**

**பெருங்கவிக்கோ**
**வா.மு.சேதுராமன்**
உலக அமைப்பாளர்,
பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்



ஜி.எஸ்.டி. - நான்கு தொழிலாளர் நலச் சட்டங்களால் பல்வேறு தொழிலாளர் நல வாரியங்கள் நிதியில்லாமல் அவதியுறுகின்றன!

# தொழிலாளர் நல வாரியங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்!

## மாநிலங்களவையில் கழக உறுப்பினர் மு.சண்முகம் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக 12-

மாநிலங்களவையில் கழக உறுப்பினரும் தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலா ளருமான மு.சண்முகம் அவர்கள் 31.07.2024 அன்று ஜி.எஸ்.டி. மற்றும் நான்கு தொழிலாளர் நலச் சட்டங் கள் நிறைவேற்றப்பட்தன் மூலம் செஸ் மற்றும் கலால் வரி வசூல் திரும்பப் பெறப் பட்ட பல்வேறு தொழிலா ளர் நல வாரியங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டு மென சிறப்பு தீர்மானம் மீது பேசினார்.



அவர் மாநிலங்களவை யில் பேசியது வருமாறு:-

ஐயா, சுண்ணாம்புக்கல், டோலமைட் சுரங்கத் தொழிலாளர் நல நிதி, சினிமா தொழிலாளர் நல நிதி போன்ற பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங் கள் மூலம் கலால் வரி வசூல் செய்யப்பட்டு, அந்த நிதி பல்வேறு தொழிலாளர் வாரியங்களுக்கு மாற்றப் பட்டது. தற்போது ஜி.எஸ். டி. நடைமுறைக்குப் பிறகு, இந்த சட்டங்கள் ரத்து செய் யப்பட்டு, கலால் வரி வசூல் நிறுத்தப்பட்டது.

இதேபோல், நான்கு தொழிலாளர் சட்டங்கள் இயற்றிய பிறகு, இரும்பு, மாங்கனீஸ், குரோம், தாது, சுரங்கத் தொழிலாளர் நல செஸ் சட்டம், பீடித் தொழி லாளர்கள் நல செஸ் சட் டம், தேயிலை வரி, உப்பு செஸ் சட்டம் போன்ற செஸ் வசூல் தொடர்பான சில தொழிலாளர் நலச் சட் டங்கள் ரத்து செய்யப்பட் டன. இதனால் அந்தந்த தொழிலாளர் நல வாரியங் களுக்கு மாற்றப்பட்டு வந்த, செஸ் வசூல் நிறுத்தப் பட்டது.

சுரங்கத் தொழிலாளர் நல வாரியம், பீடித் தொழி லாளர் நல வாரியம் போன்ற தொழிலாளர் நல வாரியங் கள், சுகாதாரம், கல்வி, மகப்பேறு பலன்கள், மருத் துவமனை சிகிச்சை, குழுக் காப்பீடு, வீட்டு வசதி, இறப்பு மற்றும் ஒய்வூதிய பலன்கள் தொடர்பான தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தின ரின் நலனுக்காக பணத்தைச் செலவழித்து வருகின்றன. , தற்போது இந்த நல வாரி யங்கள் தொழிலாளர் நல னுக்கான பணிகளை மேற் கொள்ள நிதியில்லாமல், தொழிலாளர்கள் அவதிப்ப டுகின்றனர்.

எனவே, நிதியமைச்சகம் இப்பிரச்னையை பரிசீலித்து, தொழிலாளர் நலன் கருதி, இந்த தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாடு களை தொடர, பல்வேறு தொழிலாளர் நல வாரியங் களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட் டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாநிலங்கள வையில் கழக உறுப்பினர் மு.சண்முகம் பேசினார்.

### சேலம் கிழக்கு

# வரதராஜி படத்திறப்பு!

சேலம், ஆக. 12 –

சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. சுற்றுசூழல் அணியின் மாவட்ட அமைப்பாளர் முனைவர் வரத. ராஜ சேகர் தந்தை வராதராஜி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியில் கிழக்கு மாவட்ட துணை செயலாளர் கு. சின்னதுரை படத்தை திறந்து வைத்து உரையாற்றினார்,

இந்த நிகழ்வில் சித்தார்த்தன், சண்முகம், கவிதா ராஜா, சந்தியா ரஞ்சித்குமார், சின்னசாமி, பழனி முத்து, கலியவரதராஜி, செய்யது சாவலி, சதிஷ் கணேசன், வெங்கடே சன், சோடா வெங்கடேசன், முருகே சன், நடராஜி, காவ்யா சேகர்,டெல்லி ராஜகோபால், அசேன் பாஷா, திருச் செல்வம், பெருமாள், அப்சர் அலி, சுரேஷ், வினோத் வையாபுரி, குமர வேல், பாபு, ஜாஹீர், வினோத், குமார், மஜார், வேல்முருகன், ஷாஜ ஹான், சைமி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில் உயர்கல்வி பயிலும் அரசுப் பள்ளி, அரசு உதவிபெறும் பள்ளி (தமிழ்வழி) மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் “தமிழ்ப் புதல்வன் திட்டத்தை” தொடங்கி வைத்ததை தொடர்ந்து, அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி அனிதா அரங்கத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் தமிழ்ப் புதல்வன் திட்டத்தினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, மாணவர்களுக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரசுப்பள்ளி மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000/ வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தை தொடங்கி வைத்தார். இதனைத்தொடர்ந்துநாமக்கல்மாவட்டம், இராசிபுரம்திருவள்ளுவர்அரசுகலைக்கல்லூரியில்வனத்துறைஅமைச்சர்மருத்துவர்மா.மதிவேந்தன் 12,796 மாணவர்களுக்கு தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் ரூ.1,000/ பெறுவதற்கான பற்று அட்டைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர்மருத்துவர்ச.உமா, நாமக்கல்கிழக்குமாவட்டக்கழகச்செயலாளரும், மாநிலங்களவைஉறுப்பினரும், நாமக்கல்மாவட்டமத்தியகூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள்பெ.ராமலிங்கம்(நாமக்கல்), கு.பொன்னுசாமி(சேந்தமங்கலம்), இராசிபுரம் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர்கே.பி.ஜெகநாதன் மற்றும் நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.